# ‘நீட்’ தேர்வு: ஒன்றிய அரசு–ஆளுநரைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் உண்ணாவிரத அறப்போராட்டம்!



விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை எதிர்த்து விழுப்புரம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள நகராட்சி மைதானத்தில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம். எல். ஏ தலைமையில் நடைபெற்றது. உண்ணாவிரதத்தை உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி துவக்கி வைத்தார். சிறுபான்மை நலத்துறை அமைச்சர் கே, எஸ். மஸ்தான், சட்டமன்ற உறுப்பினர் இரா. இலட்சுமணன், விழுப்புரம் தெற்கு மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம. ஜெயச்சந்திரன், பொருளாளர் இரா. ஜனகராஜ், மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, உள்களிட்ட கழகத்தினர்,கல்லூரி மாணவ மாணவிகள், பள்ளி மாணவ, மாணவிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மருத்துவர் மற்றும் செவிலியர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.



ஒருங்கிணைந்த கடலூர் மாவட்ட கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி சார்பாக நீட் தேர்வை ரத்து செய்யாத ஒன்றிய அரசு மற்றும் ஒப்புதல் வழங்காத தமிழக ஆளுநரைக் கண்டித்து, மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டத்தை கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் வேளாண்மை மற்றும் உழவர்நலத் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் முன்னிலை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் சபா.இராசேந்திரன், கோ.ஐயப்பன், மேயர் சுந்தரி ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இள.புகழேந்தி, மருதூர் இராமலிங்கம், துரை.கி.சரவணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன், எம்.எஸ்.கணேஷ்குமார் உள்ளிட்ட மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள் சார்பு அணி நிர்வாகிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர். கடலூர் மாநகரக் கழகச் செயலாளர் கே.எஸ்.ராஜா நன்றியுரையாற்றினார்.



நீட் தேர்வை திணிக்கும் ஒன்றிய அரசு துணைபோகும் ஆளுநரை கண்டித்து ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்டம் திமுக இளைஞர் அணி மாணவர் அணி மருத்துவ அணி சார்பில் மாபெரும் உண்ணாவிரதம் அறப்போர் திருவள்ளூரில் இதில் முன்னாள் அமைச்சரும் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்டச் செயலாளர்கள் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ , டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் லியோனி கலந்து கொண்டு உண்ணாவிரத போராட்டத்தை முடித்து வைத்து சிறப்புரையாற்றினார் சட்ட மன்ற உறுப்பினர்கள் வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் பிரபு கஜேந்திரன், மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் சி.ஜெரால்டு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் மாநில மாவட்ட நிர்வாகிகள் மாவட்ட இளைஞரணி மாணவரணி மருத்துவர் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகர ஒன்றிய நகர பேரூர் பகுதி செயலாளர்கள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கல்லூரி பள்ளி மாணவர்கள் பொதுமக்கள் என ஐந்தாயிரம் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள் .



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் சர்வாதிகார அரசை கண்டித்தும், ஆளுநரையும் கண்டித்தும் திண்டுக்கல் மாவட்ட இளைஞரணி, மாணவரணி, மருத்துவர் அணி சார்பில் நடைபெற்ற உண்ணாவிரத போராட்டத்தில் அமைச்சர் இ.பெரியசாமி கண்டன உரையாற்றினார்.உடன் உணவுத்துறை அமைச்சர் அர. சக்கரபாணி, கிழக்கு மாவட்ட செயலாளர் இ. பெ. செந்தில்குமார், பாராளுமன்ற உறுப்பினர் வேலுச்சாமி, கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



தஞ்சை வடக்கு, மத்திய மற்றும் தெற்கு மாவட்ட தி.மு.க இளைஞர் அணி, மாணவர் அணி மற்றும் மருத்துவர் அணி சார்பில் நீட் தேர்வுக்கு எதிராக ஒன்றிய அரசு மற்றும் பி.ஜே.பியின் ஏஜென்டாக செயல்படும் தமிழ்நாடு ஆளுநரை கண்டித்து மாபெரும் உண்ணாவிரத அறப்போரை பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். உண்ணா விரத அறப்போரில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ (மத்திய), கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ (தெற்கு), கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, து.செல்வம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, மாநிலக் கழக நிர்வாகிகள் சி.இறைவன், எஸ்.ஜித்து, மாநகரக் கழகச் செயலாளர் மேயர் சண். இராமநாதன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, மாநில மருத்துவர் அணி துணைச்செயலவாளர் துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட ஒருகிணைந்த தஞ்சை மாவட்ட இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவர் அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள், மருத்துவ மாணவர்கள், பள்ளி மாணவ, மாணவியர்கள் ஆயிரக்கணக்கானோர் கலந்துக்கொண்டு நீட் தேர்வுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.



நீட் தேர்வை ரத்து செய்ய மறுக்கும் ஒன்றிய அரசையும், ஆளுநரையும் கண்டித்து, நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இமயம் சசிகுமார் தலைமையில் நடைபெற்ற உண்ணாவிரத அறப்போராட்டத்தை மாவட்டக் கழகச் செயலாளர் பா.மு.முபாரக், சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தபோது.



தமிழ்நாட்டில் நீட்தேர்வை ரத்துசெய்திட வலியுறுத்தி வேலூர் காந்திசிலை முன் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை மாவட்டகழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர தி.மு.க. செயலாளர் ப.கார்த்தி கேயன் எம்.எல்.ஏ, நகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் மற்றும் இளைஞர் அணி,மாணவர்அணி,மருத்துவ அணி நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு கிருஷ்ணகிரி கிழக்கு, மேற்கு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணி, மாணவரணி, மருத்துவரணி சார்பில் மாபெரும் உண்ணாவிரத அறப்போராட்டம் கிழக்கு மாவட்டச் செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மேற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான ஒய் பிரகாஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்பு சாரா ஓட்டுனர் அணி செயலாளர் டி. செங்குட்டுவன், இ.ஜி சுகவனம், எம்.வி வெற்றிச்செல்வன், ஓசூர் மாநகர மேயர் சத்யா,பி.முருகன சீனிவாசன், மாநில டேம்.வெங்கடேசன், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மாலதி நாராயணசாமி , மாவட்ட அவைத்தலைவர்கள் நாகராஜ் , யுவராஜ் , மற்றும் கிழக்கு மேற்கு மாவட்ட மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள்,மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர்கள், கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.